

# கவிதை அரங்கம்!




சுதந்திரமான மனதும்
சுயநலமாகி போனது
உனதன்பு எனக்கே
எனக்குமட்டும்
சொந்தமென்று

உறங்காத கண்களும்
உறங்கிப்போனது
உன் நெஞ்சமெனும்
பஞ்சணையில்

மாட்டிய கொலுசில்
மனசையும் கோர்த்து
விட்டாயா
ஒலிக்குமிசையில்
உன்பெயர் கேட்குதே

உளிகொண்டு
பார்வையில்
செதுக்குகின்றாய்
சிலையாகின்றேன்
நானும்

# வாழ்க்கை தத்துவம்...



சிறந்தவனாக இரு, சிறந்ததை வைத்திரு, சிறந்ததை செய்.

ஓடாத நதியும், தேடாத மனமும் தெளிவு கொள்ளாது.

போகும்போதே என்னை ரசித்து கொண்டே போ, திரும்பி வரமாட்டேன் உனக்காக. இப்படிக்கு - வாழ்க்கை.

வாழ்க்கை தரும் பாடம்
எதுவும் சில காலம்தான்.
எதிர்ப்பார்ப்பை குறைத்து கொண்டால் ஏமாற்றம் ஒன்றும் பெரிதாக இருக்காது.
நம்பு, யாரையும் முழுமையாக நம்பாதே. உன்னை மட்டும் வாழ்வில் நம்பு.
சிந்தனை செய், கோபப்படாதே.
வாழ்வது ஒரே ஒரு வாழ்க்கை. அதை அர்த்தமுள்ளதாக வாழ்ந்துவிட்டு போ.

# "மனம் நம் கை வசம்"

கீதா சேரவிருந்த அந்த வேலைக்கு வீட்டில் கடும் எதிர்ப்பு.

"பெண்கள் ஹாஸ்டலா? அதுவும் வார்டன் வேலையா?" அப்பாவின் குரலில் அச்சம். அம்மாவின் கண்களில் சந்தேகம்.

"அங்க யாரெல்லாம் இருப்பாங்க தெரியுமா கீதா?... வாழ்க்கையில் தோற்றவங்க... டைவர்ஸ் ஆனவங்க... கணவனை இழந்த விதவைகள்... அடித்து துரத்தப்பட்ட பெண்கள்... இப்படித்தான் இருப்பாங்க!.. நீ அவங்க கூடப் பழகி...அவங்க கதையைக் கேட்டுக்கிட்டே இருந்தா... கல்யாணமே வேண்டாம்!ன்னு உன் மனசு மாறிடும்." இது அம்மா.

"இந்த வேலை நம்ம குடும்பத்துக்கு ஒத்து வராது." இது அப்பா.

கீதா அமைதியாகவே இருந்தாள். எதிர்த்து ஒரு வார்த்தை பேசவில்லை.

அடுத்த வாரமே



அந்த வேலையில் சேர்ந்தாள்.

அங்கே அவள் கண்ட.. கேட்ட வாழ்க்கைக் கதைகள் எல்லாமே கசப்பானவை... ஆனால் கெட்டவையல்ல.

ஒருத்தி, கணவனால் கை விடப் பட்டவள்.

இன்னொருத்தி இளம் விதவை. "மறுமணம் வேண்டாம்" என்ற அவள் முடிவின் பின்னால் பயம் இருந்தது. விருப்பமும் இருந்தது.

விவாகரத்து பெற்ற இரண்டு பெண்களின் கணவர்களை அழைத்துப் பேசினாள். இருவருக்குள்ளிருந்த தடைகளை அப்புறப்படுத்தினாள். இருவருக்கும் கவுன்சிலிங் செய்தாள். சில மாதங்களில் அவர்கள் மீண்டும் கைபிடித்தார்கள்.

அதே ஹாஸ்டலில் மறுமணத்தை மறுத்த இரண்டு விதவைகள் தங்களுக்குள் அடைத்திருந்த வாழ்க்கையை மீண்டும் திறக்கத் துணிந்தார்கள்.

கீதா அவர்களுக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்து முடித்தாள்.

திருமண அழைப்பிதழ் வந்த நாளில் கீதாவின் அம்மா அதையே நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இந்த வேலை நம்ம குடும்பத்துக்கு ஒத்து வராது" என்று சொன்ன அதே அப்பா இன்று, "நீ பார்த்தது தோல்வியடைந்த வாழ்க்கை இல்லை கீதா... தோல்வியிலிருந்து மீண்ட வாழ்க்கை." என்றார்.

கீதா சிரித்தாள். முற்றும்

முகில் தினகரன்
கோயமுத்தூர்.... "



# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

ஒருத்தன் இந்தாடா.. பொங்கல் சாப்பிடுனு ஒரு பாக்ஸை கொடுத்தான்.
திறந்து பார்த்தா பாக்ஸ் காலியா இருந்துச்சு.. என்னடா பொங்கலை காணோம்னு கேட்டேன்..
அதுக்கு அவன் சொல்றான்.. இதுதான் டா காணும் பொங்கல்னு சொல்லிட்டு போறான்..



# தினம் ஒரு சமையல்



## கருவாட்டு முட்டை குழம்பு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| வெங்காயம் | -2 பெரிய |
| தக்காளி | -1 |
| எண்ணை | -50 ML |
| தேங்காய் பேஸ்ட் | -50 கிராம |
| துண்டு கருவாடு | -2 |
| முட்டை | -4 |
| உப்பு | -2 டீஸ்பூன் |
| மிளகாய்த்தூள் | -2 டீஸ்பூன் |
| தனியா தூள் | -2 டீஸ்பூன் |
| மஞ்சள் தூள் | -5 டீஸ்பூன் |
| புளி கரைசல் | -30 ML |
| கொத்தமல்லி | -சிறிதளவு |

செய்முறை:



ஒரு பாத்திரத்தில் எண்ணெய் சேர்த்து அது சூடான பிறகு அதில் கடுகை சேர்த்து அதனுடன் வெங்காயம் தக்காளியை சேர்த்து வதக்கிக் கொள்ளவும்

இப்போது அதனால் எப்போதும் மஞ்சள் தூள் மிளகாய் தூள் தனியா தூள் சேர்த்து வதக்கிக் கொள்ளவும்

இப்போது அதனுடன் தேங்காய் பேஸ்ட் புலி கரைசல் கொத்தமல்லியை தூவி கொதிக்க வைக்கவும்

இப்போது கருவாட்டை தண்ணீரில் 5 நிமிடம் ஊற வைத்து அதன் பிறகு அதை கொதிக்கும் குழம்பில் போட்டு வேக வைக்கவும்

மீன் வெந்தவுடன் நான்கு முட்டையை உடைத்து ஊத்தி ஆம்னி கார்னர் அதை அப்படியே தட்டு போட்டு மூடி வேக வைக்கவும்

இப்போது சுவையான கருவாட்டு குழம்பு தயார்

# மிளகுகரணை பயன்கள்



மருத்துவப்பயன்கள் :- பசிமிகுதல், முறை நோய் நீக்கல், கோழையகற்றுதல், இருமல் போதல், காச்சல், மலேரியா, வாதம் வயிற்று வலி, வீக்கம் போக்கல் ஆகியவை.

மிளகரணையின் பழம் சாப்பிட்டால் இருமல் குணமாகும்.

முறைசுரம் குணமாக மிளகரணையின் சமூலம் நிழலில் காய வைத்து சுமாராக இடித்து 10 கிராம் அளவு எடுத்து 500 மி.ல்லி. நீரில் கொதிக்க வைத்து 50 மில்லியாகச் சுண்டிய பின் வடிகட்டி உணவுக்கு முன் காலை, மாலை குடிக்க வேண்டும்.

சுரம் தணிய மிளகரணையின் இலைகளை நீரில் கொதிக்க வைத்து ஆவி பிடிக்க வேண்டும் அப்போது வியர்வை கொட்டினால் குணமாகும்.

பிடிப்பு வீக்கம், வலி குணமாக இதன் காய், வேர்ப் பட்டை வகைக்கு கைப்பிடி அளவு எடுத்து அரை லிட்டர் நல்லெண்ணையில் மிதமாக தீயில் பக்குவமாகக் காய்ச்சி வடிகட்டி தலை உடம்பு முழுக்கத் தேய்க்க வேண்டும்.

மிளகரணையின் பச்சை இலையை மென்று தின்ன வயிற்று வலி குணமாகும்.

காச்சல் குணமாக இதன் இலையை ஒரு பிடி எடுத்து 500 மில்லி நீரில் 200 மில்லி ஆகும் வரை காய்ச்சி வடிகட்டிக் குடிக்க வேண்டும்.

மிளகரணை வேரை கைப்பிடி எடுத்து 200 மில்லி விளக்கெண்ணையுடன் கலந்து பதமாகக் காய்ச்சி வடிகட்டி வீக்கத்திற்குத் தடவ விரைவில் குணமாகும்.

வேர் பட்டை 20 கிராம் சிதைத்து அரை லிட்டர் நீரில் இட்டுக் கால் லிட்டராகக் காய்ச்சி நாள்தோறும் இரண்டு வேளை குடிக்கத் தேக பலம், பசி, தீவனம் உண்டாகும். கபம், குளிர் சுரம் போகும்.

# தமிழ் சினிமாவில் நடிகர் சிவகார்த்திகேயன் இத்தனை ஹிட் படங்கள் மிஸ் செய்துள்ளாரா?



தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கும் கலைஞர் தான் சிவகார்த்திகேயன்.

எந்த ஒரு சினிமா பின்னணியும் இல்லாமல் தனது சொந்த உழைப்பால் படிப்படியாக முன்னேறி இப்போது முன்னணி நடிகராக வலம் வருகிறார்.

நாயகனை தாண்டி இப்போது தயாரிப்பாளராகவும் சிவகார்த்திகேயன் கலக்கி வருகிறார்.

நடிகை ராதிகா சரத்குமார் நடிப்பில் வித்தியாசமான கதைக்களத்துடன் உருவாகியிருக்கும் படம் தான் தாய் கிழவி. இப்படத்தை சிவகார்த்திகேயன் தான் தயாரித்துள்ளார்.

சிவகார்த்திகேயன் இப்போது வரை நிறைய ஹிட் படங்கள் கொடுத்துள்ளாலும் பல ஹிட் படங்களை இவர் மிஸ் செய்துள்ளார்.

அந்த படங்கள் எல்லாமே மற்ற நடிகர்கள் நடிக்க படு ஹிட்டாகியுள்ளது. அப்படி என்னென்ன படங்கள் என்ற விவரத்தை காண்போம்.

சூர்யா நடித்த சூரரைப் போற்று, சிம்புவின் மாநாடு, கவின் நடித்த டாடா, சித்தார்த் நடித்த சித்தா, கார்த்தி நடித்த கடைக்குட்டி சிங்கம், ஆர்யாவின் ராஜா ராணி போன்ற படங்களை தான் சிவகார்த்திகேயன் மிஸ் செய்துள்ளார்.



ரம்பா ட்ரெண்டி லுக்கில் வெளியிட்ட ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

சினிமா

# தனது புதிய படத்தில் இளவரசியாக நடிக்கப்போகும் ருக்மிணி வசந்த்... யாருடன் தெரியுமா?




கன்னட சினிமாவில் உருவான காந்தாரா 2 படத்தின் மூலம் மக்களின் கவனத்தை பெற்றவர் தான் ருக்மிணி வசந்த். அந்த படம் செம ஹிட்டடிக்க அடுத்தடுத்து நிறைய பட வாய்ப்புகள் குவிந்த வண்ணம் உள்ளது.

தங்கப்பூவாக சிவகார்த்திகேயனின் மதராஸி படத்தின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களையும் கவர்ந்தவர் தான் ருக்மணி வசந்த். கேஜிஎஃப் பட புகழ் யஷ் நடிக்கும் டாக்ஸிக் படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

இப்போது உள்ள இளம் சென்சேஷன் நாயகிகளில் ருக்மிணி வசந்த் டாப் லிஸ்டில் இருக்கிறார்.

தற்போது ருக்மிணி வசந்த் கமிட்டாகியுள்ள புதிய படம் குறித்து தகவல் வந்துள்ளது.

தெலுங்கில் சர்வானந்த் நாயகனாக நடிக்கும் புதிய படத்தில் தான் ருக்மிணி வசந்த் நடிக்க உள்ளாராம், அதிலும் இந்த படத்தில் இளவரசி கெட்டப்பில் நடிக்க உள்ளாராம். ஸ்ரீனு வைட்லா இயக்கும் இந்த படம் குறித்த நிறைய ஸ்பெஷல் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.




சிவன் முதன் முதலில் கால் பதித்த பூமி சிவபெருமானின் உண்மையான சொந்த ஊர்!

சிவன் முதன் முதலில் கால் பதித்த பூமி சிவபெருமானின் உண்மையான சொந்த ஊர்! பொதுவாக சிவபெருமானின் இருப்பிடமாக நாம் அறிந்திருப்பது கைலாசம். ஆனால் புராணங்கள் கூறும் இன்னொரு ஆச்சரியமான உண்மை என்ன தெரியுமா? உலகில் சிவபெருமான் முதன்முதலில் தோன்றிய தலம் கைலாசம் அல்ல! அது தமிழ்நாட்டின் தென் பகுதியில் உள்ள புனித ஸ்தலம் உத்தரகோசமங்கை.

### சிவனின் ஆதித் தலம் உத்தரகோசமங்கை

தமிழ்நாட்டின் ராமநாதபுரம் மாவட்டத்தில், ராமநாதபுரத்திலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இந்த பண்டைய சிவஸ்தலம்.

இந்த ஆலயம் சுமார் 3000 ஆண்டுகள் பழமையானது என புராணங்களும், வரலாற்று சான்றுகளும் தெரிவிக்கின்றன.

புராணக் குறிப்புகளின்படி,

சிவபெருமான் முதன்முதலில் பூமியில் கால் பதித்த இடம் இதுவே.
பார்வதி தேவிக்கு வேத ரகசியங்களை உபதேசம் செய்த புனித தலமும் இதுவே.
அதனால் இந்த ஊருக்கு "உத்தரகோசமங்கை" என்ற பெயர் வந்தது.

### பெயரின் அர்த்தம்

உத்திரம் ரகசியம்
கோசம் உபதேசம்
மங்கை பெண் (பார்வதி தேவி)
அதாவது, "சிவபெருமான் பார்வதிக்கு வேத ரகசியங்களை உபதேசம் செய்த இடம்" என்பதே உத்தரகோசமங்கையின் முழு பொருள்.

### உலகப் புகழ்பெற்ற மரகத நடராஜர்

இந்த கோவிலின் மிகப்பெரிய சிறப்பு உலகிலேயே அபூர்வமான மரகத நடராஜர்!
ஆறடி உயரம் கொண்ட பச்சை மரகத கல்லால் செய்யப்பட்ட நடராஜர் இங்கு உள்ளார்.
உலகிலேயே மிகப்பெரிய மரகத நடராஜர் திருவுருவம் இதுவே.
ஆண்டு முழுவதும் சந்தன காப்பு
இந்த மரகத நடராஜர் ஆண்டு முழுவதும் சந்தன காப்பால் மூடப்பட்டிருப்பார்.
மார்கழி மாதம் திருவாதிரை நாளில் மட்டும் அந்த சந்தன காப்பு களையப்பட்டு, மரகத நடராஜர் தனது இயல்பான பச்சை நிறத்தில் அருள்பாலிப்பார்.
அந்த நாளே ஆருத்ரா தரிசனம்!
அன்று லட்சக்கணக்கான பக்தர்கள் இந்த தலத்தில் கூடுவர்.

### கோவிலின் ஆன்மிகப் பெருமைகள்

மூலவர் மங்களேஸ்வரர்
அம்பாள் மங்களேஸ்வரி
இந்த ஆலயம் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது.
இக்கோவில்,
சிவபுரம்
தட்சிண கைலாசம்
பிரம்மபுரம்
மங்களகிரி
ஆதி சிதம்பரம்
என்ற பல புனிதப் பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

### ஆயிரம் லிங்கங்களை கொண்ட சகஸ்ர லிங்கம்

இந்த கோவிலில் உள்ள இன்னொரு அபூர்வம் ஆயிரம் லிங்கங்களை ஒரே திருமேனியில் கொண்ட சகஸ்ர லிங்கம்!

இது இந்தியாவில் மிக அரிய சிவ வடிவங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

### திருவிளையாடல் நடந்த புனித பூமி

திருவிளையாடல் புராணத்தில் கூறப்படும் "வலை வீசி மீன் பிடித்த படலம்" இந்த உத்தரகோசமங்கையில் தான் நடைபெற்றதாக நம்பப்படுகிறது.

### வரலாற்றுச் சிறப்புகள்

பாண்டிய மன்னர்கள் இந்த ஆலயத்தை திருப்பணி செய்து பாதுகாத்தனர்.
சில காலம் பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகவும் உத்தரகோசமங்கை விளங்கியது.
இன்றும் இந்த கோவில் ராமநாதபுரம் சேதுபதி சமஸ்தானத்தின் கீழ் பராமரிக்கப்படுகிறது.

### பல மகான்கள் வழிபட்ட தலம்

இந்த புனித ஸ்தலத்தில் வழிபட்டு அருள் பெற்ற மகான்கள்:
வேத வியாசர்
காகபுஜண்டர்
வானாசுரன்
மயன்
மாணிக்கவாசகர்
அருணகிரிநாதர்
காரைக்கால் அம்மையார்
அத்துடன்,
ராவணன் மண்டோதரி தம்பதிகள் இங்கு குழந்தை வரம் வேண்டி தவம் இருந்ததாகவும் புராணம் கூறுகிறது.

### அபூர்வ வழிபாட்டு அம்சங்கள்

இங்கு தாழம்பூ வைத்து சிவபெருமானுக்கு பூஜை செய்யப்படுகிறது.
இந்த தலத்தில் தாழம்பூ வைத்து வழிபட்டால் திருமணம் கைகூடும் என்பது நம்பிக்கை.
இங்குள்ள வராகியை வழிபட்டால் தீராத பிரச்சினைகள் தீரும்.
முருகனுக்கு வாகனமாக யானை இருப்பது இத்தலத்தின் இன்னொரு விசேஷம்.
இந்திரன் தன் ஐராவத யானையை இத்தலத்திற்கு வழங்கியதாக கூறப்படுகிறது.

### அதிசயமான தீர்த்தம்

கோவில் குளத்தில் வாழும் மீன்கள் கடல் நீரில் வாழும் மீன்கள் என்பதும் ஒரு அதிசயம்!
தல விருட்சம் இலந்தை மரம்
தீர்த்தம் அக்னி தீர்த்தம்

### வரலாற்றுப் பாதுகாப்பு

மரகத நடராஜரை கொள்ளையடிக்க அலாவுதீன் கில்ஜி முயன்றபோது, அவர் முயற்சி தோல்வியடைந்ததாக வரலாறு கூறுகிறது.

### முக்கிய திருவிழாக்கள்

இந்த ஆலயத்தில் நடைபெறும் முக்கிய விழாக்கள்:
சித்திரை திருக்கல்யாணம்
வைகாசி வசந்த உற்சவம்
ஆனி 10 நாள் திருவிழா
மார்கழி திருவாதிரை
மகா சிவராத்திரி
இதில் மிக முக்கியமானது ஆருத்ரா தரிசனம்!
மரகத நடராஜரின் சந்தன மகிமை
ஆருத்ரா தரிசன நாளில் களையப்படும் சந்தனத்தை, வெந்நீரில் கரைத்து பருகினால், தீராத நோய்களும் குணமாகும் என்பது பக்தர்களின் ஆழ்ந்த நம்பிக்கை.

### முடிவுரை

கைலாசம் சிவனின் தெய்வீக வாசஸ்தலம் என்றாலும், பூமியில் சிவபெருமான் முதன்முதலில் தோன்றிய இடமாகக் கருதப்படுவது இந்த உத்தரகோசமங்கைதான்! அதனால் தான் இது, "சிவனின் உண்மையான சொந்த ஊர்" என போற்றப்படுகிறது.



எழுத்தாளர்
-அலமேலு ரங்கராஜன்
ஸ்ரீவில்லிபுத்தூர்

# தினம் ஒரு தலைவர்கள்

# அப்பாஸ் தியாப்ஜி வரலாறு

அப்பாஸ் தியாப்ஜி (1 பிப்ரவரி 1854 - 9 ஜூன் 1936) குஜராத்தைச் சேர்ந்த இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும் மகாத்மா காந்தியின் கூட்டாளியுமாவார். பரோடா மாநிலத்தின் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றினார். இடதுசாரி வரலாற்றாசிரியர் இவரது இர்பன் அபீப் பேரனாவார்.
குடும்பமும் பின்னணியும்
அப்பாஸ் தியாப்ஜி, குசராத்திலுள்ள காம்பேயில் சுலைமானி போக்ரா அரபு குடும்பத்தில் பிறந்தார். இவர் சம்சுதீன் தியாப்ஜினுமாவார். இவரது தந்தையின் அண்ணன் பத்ருதீன் தியாப்ஜி பம்பாய் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், இந்திய தேசிய காங்கிரசின் ஆரம்பகால தலைவராகவும் இருந்தார். பிறகு பாரிஸ்டர் ஆன முதல் இந்தியர் இவர்தான்

### ஆரம்ப கால வாழ்க்கை

அப்பாஸ் தியாப்ஜி, பரோடா மாநிலத்தில் பிறந்தார். அங்கு இவரது தந்தை கெய்க்வாட் மகாராஜாவின் சேவையில் இருந்தார். இங்கிலாந்தில் படித்த இவர், அங்கு பதினொரு ஆண்டுகள் வாழ்ந்தார். பறவையியல் நிபுணர் சாலிம் அலி இவரது மருமகன்.
ஒரு நீதிபதியாக அவரது முழுமையான நேர்மை மற்றும் நேர்மை ஆகியவை இடதுசாரி காங்கிரஸ்காரர்கள் மற்றும் பிரித்தானிய எதிர்ப்பு தீவிரவாதிகளால் கூட பரவலாக அங்கீகரிக்கப்பட்டு பாராட்டப்பட்டன.
இங்கிலாந்தில் படித்த பாரிஸ்டர் என்ற முறையில், தியாப்ஜிக்கு பரோடா மாநில நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியாக வேலை கிடைத்தது. இவரது வாழ்க்கை முழுவதும், பரோடா மன்னனின் உறுதியான விசுவாசியாக இருந்தார்.



மேற்கத்திய முறைப்படி தன் குழந்தைகளை வளர்த்து, தன் குழந்தைகளை உயர்கல்விக்காக இங்கிலாந்துக்கு அனுப்பி, காலப்போக்கில் நீதித்துறையில் உயர்ந்து பரோடா மாநில உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகி ஓய்வு பெற்றார்.

பெண்களின் கல்வி மற்றும் சமூக சீர்திருத்தத்தை ஆதரித்தார். பெண்களின் உரிமைகளுக்கான ஆரம்பகால ஆதரவாளராக இருந்தார். பர்தா கட்டுப்பாடுகளை புறக்கணித்து, தனது மகள்களை பள்ளிக்கு அனுப்பியதன் மூலம் இவர் காலத்தின் நடைமுறையில் இருந்த வழக்கத்தை உடைத்தார். இவரது மகள் சோகைலா, புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் இர்பான் அபீப்பின் தாயார் ஆவார்.

### இந்திய சுதந்திர இயக்கம்

1917 இல் கோத்ராவில் நடைபெற்ற சமூக மாநாட்டில் மகாத்மா காந்தியுடன் அப்பாஸ் தியாப்ஜி கலந்து கொண்டார். அந்த நேரத்தில், இவர் ஒரு மேற்கத்திய வாழ்க்கை முறையை வழிநடத்தி, பழுதடையாத வகையில் வடிவமைக்கப்பட்ட ஆங்கில உடைகளை அணிந்து, பிரித்தானிய மாதிரியாகக் காணப்பட்டார். 1919 இல் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பிறகு, இந்திய தேசிய காங்கிரசால் ஒரு சுயாதீன உண்மை கண்டறியும் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டபோது அது அனைத்தும் மாறியது. ரெசினால்டு டையர் செய்த அட்டூழியங்களை நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களை இவர் குறுக்கு விசாரணை செய்தார். இந்த அனுபவம் இவரை காந்தியை பின்பற்றுபவராக்கியது. தனது மேற்கத்திய பாணி பிரபுத்துவ வாழ்க்கையை விட்டுவிட்டு, காந்தி இயக்கத்தின் பல சின்னங்களை ஏற்றுக்கொண்டார். ஆங்கில ஆடைகளை எரித்து, காதி நூற்று அதையே அணிந்தார். மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டிகளில் நாடு முழுவதும் பயணம் செய்தார், எளிய தர்மசாலைகள் மற்றும் ஆசிரமங்களில் தங்கி. தரையில் தூங்கினார். மேலும், பிரித்தானிய இந்திய அரசாங்கத்திற்கு எதிராக சத்தியாகிரகத்தை பிரசங்கித்து பல மைல்கள் நடந்து சென்றார். தன்னுடைய எழுபது வயதைக் கடந்தும் இந்தப் புதிய



வாழ்க்கை முறையைத் தொடர்ந்தார். பல ஆண்டுகள் பிரித்தானிய சிறைகளில் இருந்தார். 1928 இல், இவர் சர்தார் வல்லபாய் படேலை பர்தோலி சத்தியாகிரகத்தில் ஆதரித்தார். இதில் பிரித்தானிய துணி மற்றும் பொருட்களைப் புறக்கணித்தார். தியாப்ஜியின் மகள் சோகைலா இவ்வாறு கூறுகிறார். "குடும்பத்தின் வெளிநாட்டு ஆடைகளுடன் ஒரு காளை வண்டியில் ஏற்றியது நினைவுக்கு வந்தது. அதில் தன் தாயின் "சிறந்த ஐரிஷ் துணி, படுக்கை விரிப்புகள், மேஜை கவர்கள்...", தனது தந்தையின் "அங்கர்கா, சௌகாஸ் மற்றும் ஆங்கில உடைகள்", தனது சொந்த உடைகள் "பிடித்த பட்டு மற்றும் வெல்வெட் தொப்பிகள்" அனைத்தும் ஏற்றப்பட்டு எரிக்க கொடுக்கப்பட்டது.

### உப்பு சத்தியாகிரகம்

1930 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இந்திய தேசிய காங்கிரசு முழு தன்னாட்சி சாற்றல் அல்லது பிரித்தானிய இராச்சியத்திலிருந்து சுதந்திரத்தை அறிவித்தது. சட்ட மறுப்பு அல்லது சத்தியாகிரகத்தின் முதல் செயலாக, மகாத்மா காந்தி பிரித்தானிய உப்பு வரிக்கு எதிராக நாடு தழுவிய வன்முறையற்ற போராட்டத்தைத் தேர்ந்தெடுத்தார். காந்தி விரைவில் கைது செய்யப்படுவார் என்று காங்கிரசு அதிகாரிகள் நம்பினர். மேலும் காந்தி கைது செய்யப்பட்டால் உப்பு சத்தியாகிரகத்திற்கு தலைமை தாங்க காந்தியின் உடனடி வாரிசாக தியாப்ஜியைத் தேர்ந்தெடுத்தனர். 1930 ஆம் ஆண்டு மே 4 ஆம் தேதி, தண்டிக்கு உப்பு அணிவகுப்புக்குப் பிறகு, காந்தி கைது செய்யப்பட்டார். மேலும், குசராத்தில் உள்ள தாராசனா உப்பளங்களில் நடந்த உப்பு சத்தியாக்கிரகத்தின் அடுத்த கட்ட சோதனைக்கு தியாப்ஜி பொறுப்பேற்றார்.

7 மே 1930 அன்று, தியாப்ஜி தாரசானா சத்தியாகிரகத்தைத் தொடங்கினார். சத்தியாக்கிரகிகளின் கூட்டத்தில் உரையாற்றினார், மேலும் காந்தியின் மனைவி கஸ்தூரிபாய் காந்தி இவருடன் இணைந்து அணிவகுத்து நின்றார். மே 12 அன்று, தாராசானாவை அடைவதற்கு முன்பு, தியாப்ஜி மற்றும் 58 சத்தியாக்கிரகிகள் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டனர். அந்த நேரத்தில், சரோஜினி நாயுடு, சத்தியாகிரகத்தை வழிநடத்த நியமிக்கப்பட்டார். இது இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் மீதான உலக கவனத்தை ஈர்த்தது. காந்தியின் கைதுக்குப் பிறகு மே 1930 இல் உப்பு சத்தியாகிரகத்தின் தலைவராக அவருக்குப் பதிலாக எழுபத்தாறு வயதில் தியாப்ஜியை மகாத்மா காந்தி நியமித்தார். தியாப்ஜி விரைவில் பிரித்தானிய இந்திய அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். காந்தியும் மற்றவர்களும் தியாப்ஜியை "குசராத்தின் பெரிய முதியவர்" என்று மரியாதையுடன் அழைத்தனர்.

### இறப்பு

அப்பாஸ் தியாப்ஜி 9 ஜூன் 1936 அன்று முசோரியில் (இப்போது உத்தராகண்டில் உள்ளது) இறந்தார். இவரது மரணத்திற்குப் பிறகு, காந்தி ஹரிஜன் செய்தித்தாளில் "ஜி. ஓ. எம். ஆஃப் குஜராத்" (குஜராத்தின் கிராண்ட் ஓல்ட் மேன்) என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார்.

